விலை: சதம் 75 ★★

# ஈழநாடு
THE EELANADU

மலர் 23 புரட்டாதி 16 ஜுல்ஹஜ் 3 இதழ் 230
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 2 10-1981

உங்களுக்கு தேவையான
தரமான
கட்டிடப் பொருட்கள்,
குளியல் அறை,
மலசலகூட இணைப்புகள்
முதலியன நியாயமான விலைகளில்
பெற்றுக்கொள்ள
விஜயம் செய்யுங்கள்
சமுத்ரா ரேட்ஸ்
லிமிட்டெட்
23/2, ஸ்ரான்லி றேட்,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி; 7236 (1108)

## லோகேஸ்வரன் வவனியா புதிய அரச அதிபர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக பதிவாளர் திரு. கே. சி. லோகேஸ்வரன் வவனியா அரசாங்க அதிபராகவும் மாவட்ட செயலாளராகவும் நியமிக்கப் பட்டுள்ளார்.

இம்மாதம் 5ம் திகதி திங்கட்கிழமை இவர் தமது பதவியைப் பொறுப்பேற்கிறார். இவரது புதிய நியமனத்தை அடுத்து பல்கலைக்கழகத்தின் உதவி பதிவாளர் திரு. ஜே. எச். அரியரத்தினம் பதில் பதிவாளராகக் கடமையாற்றுவார். (இ)

★ யாழ். மாவட்ட குடிசைக் கைத்தொழில்நிலைய போதனாசிரியர்கள்:

# வெற்றிடங்களை நிரப்புமாறு
# அமைச்சு உத்தரவு

(சுண்டிக்குளி)

**யாழ்ப்பாண மாவட்டத்தில் குடிசைக் கைத்தொழில் நிலையங்களின் வெற்றிடங்கள் அனைத்தையும் உடனடியாக நிரப்புமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு கைத்தொழில் அமைச்சு பணித்துள்ளது.**

யாழ் மாவட்ட சிறுகைத் தொழில் பகுதியினரின் ஆதரவில் இயங்கிவரும் குடிசைக் கைத்தொழில் நிலையங்களில் போதனாசிரியர்கள் பற்றாக் குறையினால் மேற்படி நிலையங்களின் பயிற்சியாளர்கள் பெரிதும் பாதிப்புக்குள்ளாகியிருந்தனர்.

இது சம்பந்தமாகச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் புகார் செய்யப்பட்டிருந்தது.

கைத்தொழில் அமைச்சின் துரித நடவடிக்கையைத் தொடர்ந்து யாழ். சிறுகைத் தொழில் பகுதியினர். போதனாசிரியர்கள் இல்லாத கைத் தொழில் நிலையங்களுக்குப் போதனாசிரியர்கள்--பயிற்சியாளர்களை நியமிப்பதற்கான விண்ணப்பங்களைத் தகுதி வாய்ந்த ஆண், பெண் இருபாலாரிடமும் கோரியுள்ளது.

காரம்பன், புங்குடுதீவு. சங்கானை, கைதடி போன்ற இடங்களிலுள்ள தும்புத் தொழிற்சாலைகளுக்கும் மானிப்பாய், சுன்னாகம், அக்கராயன் குளம் ஆகிய இடங்களிலுள்ள தச்சுத் தொழிற்சாலைகளுக்கும் மீசாலை, சங்கானை ஆகிய இடங்களிலுள்ளமட்பாண்டத் தொழில்நிலையங்களுக்கும், புத்தூரில உள்ள பன்னவேலை நிலையத்துக்கும் போதனாசிரியர்களும், பயிற்சியாளர்களும் நியமிப்பதற்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ளதாக யாழ் மாவட்ட சிறுகைத் தொழில் உதவி அத்தியட்சகர் திரு. எஸ். விசுவலிங்கம் தெரிவித்தார். (க)

## கருணாநிதி வழக்குவிசாரணை 21ம் திகதிவரை ஒத்திவைப்பு

சென்னை, அக் 1

தி. மு. க. தலைவர் திரு. மு கருணாநிதி மற்றும் நூற்றுப்பதினாறு பேர் மீதான வழக்கு விசாரணை இம்மாதம் 21-ம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

சென்னையிலுள்ள உதவி இலங்கைத் தூதரகம் முன் பாகமறியல் போராட்டம் நடத்த முயற்சித்தபோது கைதாகி நேற்று முன்தினம் விடுதலை செய்யப்பட்ட திரு. மு. கருணாநிதி வியாழக்கிழமை நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டுமென்று பணிக்கப் பட்டு அவர் மீது சென்னை

(6-ம்பக்கம் பார்க்க)

திருட்டுப் பொருட்களை

## பஸ்ஸில் போட்டுவிட்டு ஓட்டம் பிடித்தனராம்!

(மாவிட்டபுரம்)

சுமார் 5000 ரூபா பெறுமதியான திருட்டுப் பொருட்களை, சாக்கில் கட்டி, பஸ்ஸில் கொண்டு சென்றபோது, சந்தேகம் கொண்ட பிரயாணிகள் கேள்வி எழுப்பவே, சந்தேகநபர்கள் சாக்கைப்போட்டு விட்டு ஓட்டம் பிடித்தனர்.

மயிலிட்டியைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளை சிவானந்தன் என்பவரது கடையிலிருந்து 5000 ரூபா பெறுமதியான துணி வகைகள் திருட்டுப் போயிருந்தன.

இத்திருட்டுப் பொருட்களை சாக்கில் கட்டி பஸ்ஸில் கொண்டு சென்றபோது சந்தேகநபர்கள் ஓட்டம் பிடித்தனர்.

கைப்பற்றப்பட்ட சாக்கு காங்கேசன்துறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டது. (கு)

# எலிஸபெத் மகாராணி
## ஜனாதிபதி மாளிகையில் தங்குவார்
### காலிமுகத் திடலில் உரையாற்றுவார்

(கொழும்பு)

**இலங்கையில் 5 நாள் விஜயத்தை மேற்கொண்டு இம்மாதம் 21ம்திகதி இங்கு வரும் பிரிட்டிஷ் மகாராணியாரையும் அவரது கணவரையும் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன, பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா, அமைச்சர்கள், வெளிநாட்டுப் பிரமுகர்கள், ராஜதந்திரிகள் ஆகியோர் வரவேற்பர்.**

மகாராணியாரின் விஜயம் குறித்து உத்தியோக பூர்வமாக நேற்று அறிவிக்கப்பட்டது.

**விமான நிலையத்தில்**

21ம் திகதி மாலை 4 மணிக்கு கட்டுநாயக்கா விமான நிலையத்தில் மகாராணியாருக்கு செங்கம்பள வரவேற்பளிக்கப்படும். தொடர்ந்து மகாராணியார் ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவைச் சந்திப்பார். அடுத்து பிரதமர் திரு. பிரேமதாசா மகாராணியைச் சந்திப்பார்.

**ஜனாதிபதி மாளிகையில் தங்குவார்**

இரவு மகாராணிக்கு அரச வரவேற்பு அளிக்கப்படும். மகாராணியார் ஜனாதிபதி மாளிகையிலேயே இரவு தங்குவார்.

22ம் திகதி இலங்கையில் சர்வஜன வாக்குரிமை கிடைத்த 50வது ஆண்டு நிறைவு விழா தொடர்பாக காலிமுகத்திடலில் காலை 9-20 மணிக்கு இடம்பெறும் வைபவத்தில் மகாராணியார் கலந்து கொள்கிறார்.

இவ்வைபவத்தில் ஆயிரத்துக்கும் அதிகமானபாடசாலைமாணவர்களது அணிவகுப்பு, பாண்ட் இசை அணிவகுப்பு ஆகியவற்றை பார்வையிடும் மகாராணியார் அங்கு உரை நிகழ்த்துவார். ஜனாதிபதியும் உரை நிகழ்த்துவார். 20 நிமிடங்கள் நடைபெறும் இவ்வைபவத்தில் பொது மக்களும் கலந்துகொள்வர். ஆயுதப் படைகளின் அணிவகுப்பு நடைபெறமாட்டாது.

அங்கிருந்து மகாராணியின் கணவர் பிலிப் எடின்பரோ கோமகன் பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மகா

(6ம் பக்கம் பார்க்க)

## அ. தி. மு. க. எம். எல். ஏ. ராஜினாமா!

சென்னை, அக் 1.

அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழக தமிழக சட்டசபை உறுப்பினர் திரு இ. வெங்கடேசன், அ. தி. மு. கழகத்திலிருந்து ராஜினாமா செய்துள்ளார்.

6-ம் பக்கம் பார்க்க)

## புங்குடுதீவு கடற்கரையில் கடல் யானை

(புங்குடுதீவு)

புங்குடுதீவு கடற்கரையில் கடல் யானை ஒன்று ஒதுங்கியுள்ளது!

புங்குடுதீவு வல்லன் குறிச்சியில் ஒதுங்கிய சுமார் பதினாறு அடி நீளமும் ஒன்பது அடி சுற்றளவும்கொண்ட இக்கடல் யானையை திரளான மக்கள் பார்வையிட்டு வருகின்றனர்.

ஒரு மாதத்திற்கு முன்பு ஒருவகை இராட்சத மீன் குறிகாட்டுவான் கரையில் ஒதுங்கியது குறிப்பிடத்தக்கது. (இ)

## லொறியினால் மோதுண்டவர் உடைமைகளையும் பறிகொடுத்தார்!

(சுண்டிக்குளி)

லொறியினால் மோதுண்ட ஒருவரை அதே லொறியில் வந்தவர்கள் கூட்டிச்சென்று ஆஸ்பத்திரியில் அனுமதித்தார்கள். காயமடைந்தவர் மயக்கம் தெளிந்தபின்னர் தமது சைக்கிளையும், கைக்கடிகாரத்தையும், காணாது திகைப்படைந்து பொலிஸில் புகார் செய்துள்ளார்.

பண்ணை வீதியால் சைக்கிளில் வந்த மண்டைதீவைச் சேர்ந்த அன்ரனி பெர்னாண்டோ என்பவர் லொறியினால் மோதப்பட்டபின்னர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டார்.

மயக்கம் தெளிந்த அன்ரனி மோதப்பட்ட லொறியிலேயே தான் ஆஸ்பத்திரிக்கு கொண்டு வரப்பட்டதாகவும் தனது சைக்கிளையும், கைக்கடிகாரத்தையும் காணவில்லையென்றும், பொலிஸாருக்குப் புகார் செய்துள்ளார்.

யாழ். பொலிஸ் பகுதி குற்றத்தடுப்புப் பொலிஸ் உத்தியோகத்தர் எஸ். நடராஜா புலன் விசாரணை மேற்கொண்டுள்ளார். (க)

யாழ். பொதுசன நூலகத்துக்கு

## ஆயிரத்துக்கும் அதிகமான நூல்களை உதவ நெடுமாறன் முன்வந்துள்ளார்

(யாழ்ப்பாணம்)

யாழ். வன்செயலின் போது எரிக்கப்பட்ட யாழ். பொதுசன நூலகத்துக்கு ஆயிரத்துக்கும் அதிகமான புத்தகங்களை கொடுத்துதவ தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ் கட்சித்தலைவரும் தமிழக சட்டசபை உறுப்பினருமான திரு. பி. நெடுமாறன் முன்வந்துள்ளார்.

திரு. நெடுமாறனை யாழ் மாநகர முதல்வர் சந்தித்த போது, எரிந்த நூலகத்திற்கு உதவி செய்யவேண்டுமென்று கோரிக்கை விடுத்திருந்தார்.

தமிழ்நாடு முதலமைச்சருடனும், தமிழகத்திலுள்ள சகல நூல் பதிப்பகங்களுடனும் தாம் தொடர்புகொண்டு 1000க்கும் அதிகமான புத்தகங்களைச் சேகரித்து உதவி செய்வதாக திரு. நெடுமாறன் உறுதி

(6ம் பக்கம் பார்க்க)

அரசாங்க
மரக் கூட்டுத்தாபனம்

## பொது மக்களுக்கு ஓர் நற்செய்தி

குடா நாட்டிலுள்ள அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் விற்பனை நிலையங்களிலும், முகவர் நிலையங்களிலும் தற்பொழுது முதிரமரம், விறசு, அரித்தமரம், கப்பு, தடி ஆகியன போதியளவு கையிருப்பில் உள்ளன.

காரியாலயம் நெருங்கி வருவதால் பொதுமக்கள், மரத்தளபாடம் செய்வோர், பேக்கரிச் சொந்தக்காரர்கள், மற்றும் ஏனையோர் தங்களின் தேவைகளை முற்கூட்டியே பெற்று கையிருப்பில் வைத்திருக்கும்படி வேண்டப்படுகின்றனர்.

கூட்டுத்தாபனத்தின் மேற்கூறிய பொருட்களை எதுவித அனுமதிப்பத்திரமுமின்றி நேரடியாகப் பெற்றுக்கொள்ளலாம்.

பிரதேச முகாமையாளர்
(வடபிரதேசம்)
அரசாங்க மரக்
கூட்டுத்தாபனம்,
இல: 25,
ஸ்டான்லி வீதி,
யாழ்ப்பாணம். 1116

---

கன்னாகம்
ப. நோ. கூ. சங்கம்
(வரையறுக்கப்பட்டது)

## அறிவித்தல்

சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் 3000 க்கு மேற்பட்ட வெற்றுச் சாக்குகளும், கழிவு சீனியும், பழுதடைந்த நவதானியங்களும் மற்றும் கழிவு பொருட்களும் பாவிக்கப்பட்ட பழைய காகிதாதிகளும். (கிட்டங்கள்) கேள்விப் பத்திர மூலம் விற்பனைக்கிருக்கின்றன.

வெற்றுச் சாக்குகளுக்கு ரூபா 250/-உம், ஏனையவற்றிற்கு ரூபா 50/-உம் மீளவிப்பு வைப்புப் பணமாகச் சங்கத்தின் அலுவலகத்தில் செலுத்திச் சங்க வேலைநாட்களில் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

9-10-81 வெள்ளிக்கிழமை நண்பகல் 12-00 மணி வரையும் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

பொது முகாமையாளர்
30-9-81 1117

---

யாழ். கூட்டுறவுப்
புடவை ஆலை

## தொழிலாளர் தேவை

மேற்படி எமது ஆலையில் இயந்திரங்கள் பொருத்துவதற்கு நல்ல உடற்கட்டுள்ள ஆண் தொழிலாளர்கள் தேவைப்படுகின்றனர். இயந்திரவேலை அறிவும், அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது. நாட்சம்பள அடிப்படையில் வேதனம் வழங்கப்படும். விரும்புவோர் 8-10-81 அன்று காலை 9-30 மணிக்குக் கீழ்க்காணும் விலாசத்தில் விண்ணபத்துடன் சமுகமளிக்கவும்.

இங்ஙனம்,
சே. சிவலிங்கம்,
தலைவர்.
யாழ். கூட்டுறவுப்
புடவை ஆலை,
இருபாலை வீதி,
கோண்டாவில். 1107

---

## அறிவித்தல்

புத்தூர் மேற்கு
கலைமகள் ச. ச.

நிலையக் கட்டிட நிதிக்காக 3-10-81-ம் திகதி இழுக்கப்படவிருந்த தனியர்களுக்கான அதிர்ஷ்டலாபச் சீட்டு, 1-11-81-ம் திகதி இழுக்கப்படும்.

இ. கதிர்காமநாதன்
1111 (செயலாளர்)

---

பின்னுறுதிக்கட்டளை
பற்றிய

## அறிவித்தல்

பருத்தித்துறை
மாவட்ட நீதிமன்றம்

காலஞ் சென்ற அல்வாய் தெற்கு வைத்திலிங்கம் தனபாலசிங்கம் என்பவரின் மரணசாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்
திலகவதி தனபாலசிங்கம்
இலகடி, அல்வாய் தெற்கு அல்வாய்.

—மனுதாரர்

மரண சாதன நியாயாதிக்கம் இல. 1106/T.

1. தனபாலசிங்கம் மனோகரன். ] பராயமற்ற
2. தனபாலசிங்கம் ஜெயதேவி ]
3. தனபாலசிங்கம் மகள் லலிதா ] வர்கள்
4. தனபாலசிங்கம் மகள் ரூபா ]
எல்லாரும் இலகடி அல்வாய் தெற்கு அல்வாய்.
5. கனகசபை கனகசபாபதி அல்வாய் தெற்கு, அல்வாய்.

—பாதுகாவலன்

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு (மேலே) பெயர் குறிப்பிட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1981-ம் ஆண்டு ஆவணி மாதம் 28-ஆந்நாளன்று முற்பகல் 9-30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

நீதிமன்ற கட்டளைப்படி
(ஒப்பம்)
க. செல்வராசா,
பதிவாளர்.
1981ம் ஆண்டு ஆவணி மாதம் 24-ம் திகதி.
1981-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 23ம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.
ஆக்கம்
(ஒப்பம்)
இ. சதானந்தன்
சட்டத்தரணி,
புலோலி தெற்கு,
புலோலி. 1114

---

# வரி விளம்பரம்

### விற்பனைக்கு

அளவெட்டி கூட்டுறவாளர் வீதியில் 10 பரப்புக் காணி உடனடி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: R. இராசநாயகம், கூட்டுறவு வீதி, அளவெட்டி வடக்கு, அளவெட்டி. 1113

யாழ்ப்பாணம், ஸ்டான்லி வீதி, இலக்கம் 139 (507) கொண்ட வீடு, அளவும் 4 பரப்புக் காணியுடன் காலியான நிலையில் விற்பனைக்கு உண்டு. தொடர்புகொள்ளவும். இ. அம்பலவாணர், 248 மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 1110

### விற்பனைக்கு

நசனல் குளிர் சாதனப் பெட்டி, இரண்டு கதவுகள் 60'' X 21 1/2''. தொடர்பு கொள்க: த. துரைராசா 32, விதானை ஒழுங்கை, சுண்டிக்குளி. 1102

ஆனைக்கோட்டை குளப்பிட்டி ஆனைக்கோட்டை தெருவில் ஆனைக்கோட்டை சந்தியில் இருந்து 100 யாருக்கு உள் பதினொரு (11) பரப்பு வீடு கட்டுவதற்கு உகந்த காணி. தெருவிற்கு வடக்குப்பக்கமாக. சிறு துண்டுகளாகவும் கொடுக்கப்படும். பொன்னுத்துரை பூபேந்திரநாதன், C/o இன்னத்தம்பி, ஒணம்ஸ் மோட்டார் கராச். ஆனைக்கோட்டைசந்தி, பழைய டச் தெரு, ஆனைக்கோட்டை. 1094

கொக்குவில், குளப்பிட்டி, காங்கேசன்துறை வீதியில் 4 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. தொடர்புகொள்ளவும்: பாலசிங்கம் நந்தபாலன், 105, பலாலிவீதி, கந்தர்மடம் யாழ்ப்பாணம். 1101

---

## பின்னுறுதிக் கட்டளை

சாவகச்சேரி
மாவட்ட நீதிமன்றம்

சாவகச்சேரி தெற்கு என்னும் இடத்தைச் சேர்ந்த காலஞ் சென்ற நல்லதம்பி கதிர்காமர் என்பவரின் மரணசாதனமில்லாத மரணச்சொத்தும் பொருட்களினதும் விடயத்தில்.

மரணமெய்தியவர்
கழு. இல. 198/தத்துவம்
நல்லதம்பி கதிர்காமர்
கைம்பெண் அன்னமுத்து கதிருழி ரோட், சாவகச்சேரி.

மனுதாரர்
எதிராக
பராயமற்ற
1. கதிர்காமர் மகள் மனுரேச்வரி சாவகச்சேரி தெற்கு சாவகச்சேரி.
2. கதிர்காமர் கணேசமூர்த்தி மேற்படி
3. கதிர்காமர் மகள் இரஞ்சினி மேற்படி
4. தாமோதரம்பிள்ளை சுந்தரம் மேற்படி

எதிர்வாதிகள்.

மேற்கூறப்பட்ட பெயரைக் கொண்ட காலஞ்சென்றவரின் மரணசாதனம் எழுதப்படாத சொத்துமீதான உரிமைத்தத்துவம் பெறும் மேற்கூறப்பட்ட 198ம் இலக்க வழக்கு மேற்கூறப்பட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு அவ்வண்ணமே வழங்கப்பட்டுள்ளது.

ஆகவே அதில் ஆர்வமுள்ள எவரும் இந்நீதிமன்றத்தில் 1981ம் ஆண்டு ஐப்பசி மாதம் 28ந் திகதி முற்பகல் 9மணிக்கு தோன்றி ஏன் இந்த நீதிமன்றக் கட்டளையை நிறைவேற்றக்கூடாதென்பதனை தெரிவிக்கவும்.

நீதிமன்ற ஆணைப்படி
வி. சிவசுப்பிரமணியம்,
பதிவாளர்.
தயாரித்தவர்:
செ. பாலகிருஷ்ணன்
மனுதாரரின் சட்டத்தரணி. 1109

---

நூல்மதிப்பீடு:

## புதுமுறைக் கட்டுரைக்கோவை

வெளியீடு- காரைநகர் தமிழ்வளர்ச்சிக் கழகம்; விலை ரூபா 4.80.

க. பொ. த. ப. [சா/த] பரீட்சைக்குரிய தமிழ் வினாத்தாளில், ஆக்கத்திறன் சம்பந்தமான பகுதியில் சில மாற்றங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. கொடுக்கப்படும் தலைப்புக்களில் ஒன்றைத் தெரிவு செய்து ஒரு கட்டுரை எழுதினால் போதும் என்ற நிலை இப்போதில்லை. தலைப்புக்களுக்கு ஏற்றபோல விவரணம், விமரிசனம், ஆய்வுரை, உரைச்சித்திரம், ஒப்பீட்டுப் பகுப்பாய்வு போன்றவற்றுள் ஒன்றை மாணவர்கள் எழுத வேண்டும்.

புதுமுறைக்கட்டுரைக் கோவை மாணவர்களுக்கு ஒரு வழிகாட்டியாகவும் ஆசிரியர்களுக்குத் துணைவனாகவும் சரியான சந்தர்ப்பத்தில் வெளியாகியுள்ளது. ஆசிரியர்களாகவும் எழுத்தாளர்களாகவும் புகழ்பெற்றோரின் ஆக்கங்கள் இதில் இடம் பெற்றுள்ளன. ந. சபாரத்தினம் B.A. [விமரிசனம்], வித்துவான் ச. அடைக்கலமுத்து [விவரணம்], முல்லைமணி வே. சுப்பிரமணியம் B.A. [உரைச்சித்திரம்], நா. இராமலிங்கம் [ஆய்வுரை], ம சற்குணம் M. A. [விமரிசனம்], வ. அ. இராசரத்தினம் [வருணனை], புலவர்மணி, அல்ஹாஜ் ஆ. மு. ஷரிபுத்தீன் [ஆய்வுரை], அ. ச. சர்மா B.Sc. [ஆய்வுரை]

(5ம் பக்கம் பார்க்க)

---

தென்மராட்சி மேற்கு
ப. நோ. கூ. சங்கம், கைதடி.

## பதவி வெற்றிடத்திற்கான விளம்பரம்

### பொது முகாமையாளர் தரம் III

மேற்குறிப்பிட்ட பதவிக்கு இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

அடிப்படைத் தகைமை: குறைந்தளவு 2 வருடங்களாவது யாழ். மாவட்ட எல்லைக்குள் வசிப்பவராக இருக்க வேண்டும்.

வயது: விண்ணப்ப முடிவுத் திகதியன்று 27 வயதுக்குக் குறையாதவராகவும் 50 வயதுக்கு மேற்படாதவராகவும் இருக்க வேண்டும். தற்போது கூட்டுறவு ஊழியர்களாக இருப்போருக்கு இந்நியதி செல்லுபடியாகாது.

வேதனம்: 400 — 720
20 x 10 — 30 x 4

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி: பூர்த்தியாக்கப்பட்ட விண்ணப்பங்களை 1981-10-15-ந் திகதி நண்பகல் 12-00 மணிக்கு முன் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபால்மூலம் அனுப்புதல் வேண்டும்.

தேவையான தராதரங்கள் மற்றும் தகைமைகள் பற்றிய விளக்கங்கள் யாவையும் பெறுவதற்காக கீழ்க்காணும் விலாசத்திற்கு எழுத்துமூலமோ அல்லது நேரடியாகவோ பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பப் படிவமும், விளக்கங்களும் பெறுவதற்கு ரூபா 3/- பெறுமதியான காசுக்கட்டளை செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். தபால்மூலம் பெறவிரும்பின் முத்திரை ஒட்டப்பட்ட சொந்த முகவரியிட்ட கடித உறையும் அனுப்பப்படல் வேண்டுமென்பதைக் கவனத்திற் கொள்ளவும்.

தலைவர்
தென்மராட்சி மேற்கு ப. நோ. கூ. சங்கம்,
கைதடி. 1981-09-30 1115

---


# வைத்திலிங்கம்ஸ்

★ உறுதியானதும்
★ நீடித்து உழைப்பதும்
★ தன்னிகரற்றதுமான

'றிவர்' பிரான்
கல்வனைஸ்ட் இரும்புத் தகடுகள்
பிரதான விநியோகஸ்தர்களும்,
இரும்புப் பொருட்கள் விற்பனையாளர்களும்

என். வைத்திலிங்கம்
நிறுவனத்தார்
450, பழைய சோனக தெரு,
கொழும்பு - 12
தொலைபேசி: 33143-4
கிளை:
138, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 530


---

## கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி

பாடசாலைவிட்டு விலகியோருக்கான

## தொழில்நுட்ப பயிற்சி வகுப்புகள் 1981/82

மேற்படி வகுப்புகள் ஐப்பசி மாதம் 15-ந் திகதி ஆரம்பமாகவுள்ளன. பயிற்சி பெற விரும்புவோர் இம்மாதம் 8-ந் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

1. ஒட்டுதலும் பொருத்துதலும் (ELECTRIC WELDING)
2. மின்சாரக்கம்பி இணைத்தலும் மின் உபகரணம் திருத்தலும் (Electric Wiring and Repair of Electrical Appliances)

அதிபர்
81-10-02 1112

### மணிவாக்கு

சத்தியமே தலையாய தருமம் அதில் மற்றும் பல தருமங்களும் அடங்கியிருக்கின்றன என்று நான் கருதுகிறேன்.
— மகாத்மாகாந்தி

# நமது நோக்கு

## அகில உலகின் அவசிய தேவை

துப்பாக்கியும், கைக்குண்டும் தொழிற்படாத இடம் எதனையும் இன்று உலகில் காணமுடியுமா?

நாடுகளுக்குள்ளும், நாடுகளுக்கிடையும், சர்வதேச அரங்கிலும் சிந்தனை, சொல், செயலெல்லாம் இராணுவ பலத்தைப் பற்றியே!

மனித சமுதாயம், இன்று குவியும் இராணுவ ஆயுதங்களில் இருந்து தப்பிப் பிழைக்குமா என்பது இன்றும் சந்தேகமாகவே இருக்கின்றது.

வல்லரசுகளின் உலக ஆதிக்கப் போட்டி, உலக நாடுகள் அனைத்தையும் நிலைகுலையச் செய்கின்றது.

மகாத்மா காந்தி பிறந்த தினமாகிய இன்று, இந்தப் பழைய மனிதனின் போதனைகள் சாதனைகள் எதுவும் உலக அமைதிக்கு, நாட்டின் சமாதான வாழ்வுக்கு, தனிமனிதனின் சுதந்திரத்திற்கு புதிய வழி காட்டும் வல்லமையுடையதா? இதுவே எமது விடயம்.

நாட்டின் விடுதலைக்கு மட்டுமல்ல, தனிமனிதனின் சுக வாழ்வுக்கும் துணிவூட்டும் பாரதியார் பாடலுக்குப் படம்போல அமைந்தவர் காந்தியடிகள்.

விதந்தரு கோடி இன்னல்
விளைந்தெனை அழித்திட்டாலும்
சுதந்திரதேவி! நின்னைத்
தொழுதிடல் மறக்கிலேனே.

படைபலத்தை மேலாக மதித்த மேனாட்டு மக்கள் போரிலே நம்பிக்கை வைத்தனர். கிறீஸ்துவின் போதனைகளை அடிப்படையாகக் கொண்டு வாழும் இந்நாடுகள், கிழமையில் ஆறு நாட்களுக்கு இராணுவப் பலத்தை நம்புவதும், ஞாயிற்றுக்கிழமை தோறும் ஆலயத்தில் இயேசுபிரான் பேரில் இறைவனை வழிபடுவதும் அவர்களின் முரண்பட்ட கொள்கையைக் காட்டுவதாகுமென்பது அடிகளார் கருத்து.

இதற்கு நேர்மாறாகக் கிறீஸ்துநாதருக்குப் பின் வாழ்ந்த ஒரேயொரு உண்மைக் கிறீஸ்தவராகிய காந்தியடிகள், தமக்குத் தீங்குசெய்தவர்களை எல்லாம் மன்னித்தார். தம் மீது குண்டு வீசிய அறிவற்ற இளைஞனையும் ஒருசிறிதும் கொடுமைப் படுத்துதல் ஆகாது என்றும் அவனைத் திருத்தி நல்வழிப்படுத்தவே வேண்டும் என்றும் வேண்டிக் கொண்டதை நாம் அறிவோம்.

தன்னரிய திருமேனி
சதைப்புண்டு தவிப்பெய்திய
பன்னரிய பெரும்பாடு
படும்போதும், "பரிந்தெந்தாய்!
இன்னதென அறிய இலார்
தாம்செய்வது. இவர்
பிழையை மன்னியும்'
என்றெழியற்கனிவாய்
மலர்ந்தார் நம் அருள்
வள்ளல்!

இயேசுபிரான் இறைவனை வேண்டிக்கொண்டதனை காந்தியடிகளின் செயலும் நினைவூட்டுகின்றது.

இத்தகைய சிறந்த சான்றோர் இன்று போர்க்கோலம் கொள்ளும் உலகுக்கு பிணக்கும் பகைமையும் போட்டியும் பொறாமையும் மலிந்திருக்கும் நாட்டுக்கும் சமூகத்துக்கும் இடித்து இடித்து உரைப்பது அவர்களின் அற்புத வாழ்க்கையே.

போர் என்னும் இருள் சூழ்ந்த இரண்டாவது உலகயுத்த காலத்தில் ஹிட்லரின் படைகள் ஐரோப்பாவை சுருட்டிக்கட்டி விடுமென்ற கட்டத்திலும் உலகத்தை நடுங்கவைத்த அச்சர்வாதிகாரிக்கும் சத்தியாக்கிரகத்தின் மேன்மையை எடுத்துரைத்தார்.

உப்பில்லாப் 'பத்தியங்' கொண்ட இம்மருந்தை உட்கொள்ளும் மனப்போக்கற்ற 'மாவீரன் ஹிட்லர்' மண்கவ்வ கனகாலம் செல்லவில்லை. இருந்தும் இன்றைய உலகம் அதன்படிப்பினையை முற்றாய் மறந்துவிட்டது.

"இருள் மத்தியில் ஒளி என்றும் உளது" என்பது காந்தியடிகளின் அசையாத நம்பிக்கை. பகைவனின் மனப்போக்கை அன்பால் பண்பால் மாற்ற முடியுமென்பதே சத்தியாக்கிரகத்தின் தாற்பரியம்.

1919ல் நான்கு வாரங்களில் இந்திய உபகண்டத்தின் மனோபாவத்தை முற்றிலும் மாற்றி அச்சம் அகற்றி வறுமையில் வாடும் கோடி மக்களுக்கு சுதந்திரம் பிறப்புரிமை என்ற நம்பிக்கையை ஊட்டிவைத்தார். கொடுங்கோலாட்சியை சத்தியாக்கிரகம் என்னும் தனித்துவ ஆயுதங்கொண்டு ஒத்துழையாமை என்ற மாபெரும் இயக்கத்தை உருவாக்கி கட்டுப்பாட்டுடன் வழிநடத்தினார். இருந்தும் முப்பது வருடங்களின் பின்னரே நாட்டுக்கு சுதந்திரம் கிட்டியது.

இந்த முப்பது வருடலத்திலும் இந்திய மக்கள் சுதந்திரவாழ்வின் உண்மை இலக்கணத்தை பலதிறப்பட்ட இன்னல்கள் மூலம் படித்தனர். மிகச் சிறந்த பாடம் என்னவென்று கேட்டால், அநீதியையும் சமத்துவமின்மையையும் ஒரு சமூகம் வரவேற்குமானால் அதற்கு சுதந்திரம் கிட்டாது! கிட்டினாலும் நிலைக்காது என்பதே.

இந்த முப்பது வருட நீண்டகாலத்தில் ஆட்சிக்கு வந்த ஒவ்வொரு வைஸ்ராயுடனும் வாதாடி, சமாதானப் பேச்சுக்கள் நடத்தி, தமது இலட்சியத்தை அடையும் வழியைப் பெருஞ்சாலையாக்கினார்.

மனமாற்றத்தை ஏற்படுத்த தூய உள்ளத்தில் எழும் சமாதான சிந்தனைகள் பலனளிக்கும். பேச்சுவார்த்தை மூலம், பிணக்குகள் அனைத்தையும் இணக்கநிலைக்குக் கொண்டுவர முடியுமென்பதே இந்தக் காட்சிக்கெளிய, ஆனால் அரசர்களுக்கெல்லாம் அரசர் போன்ற அண்ணலிடம் இன்று நாம் படிக்கவேண்டிய பாடமாம்.

### வடிகால் திட்டத்துக்கு ரூ. 3 கோடி ஒதுக்கீடு

[கொழும்பு]

புதிய பாராளுமன்ற சூழலில் அமைந்துள்ள வடிகால்திட்டத்திற்கு 3 கோடி ரூபா வழங்கப்பட்டுள்ளது.



## தேவியைத் துதிப்போம்

தேவியின் மஞ்சத்திற்குப் பிரம்மா, விஷ்ணு, ருத்திரர், மகேஸ்வரர் கால்களாகும். சதாசிவமே பீடத்தின் பலகையாகும். அப்பலகையில் புவனேஸ்வரி புவனேஸ்வரர் வடிவமாகவுள்ளவள். அத்திருவடிவிலிருந்து ஐந்து திருமுகங்களும் மூன்று கண்களும் உள்ள பரமசிவன் வந்தார் என்பர். பரமசிவனின் இடப்பாகம் தேவிக்குரியது. அவள் சக்கரவடிவான தாடங்கள் அணிந்தவள். தாடங்கம் தாய்மையைக் குறிக்கும் தோடு. அவளுக்குத் தேவிகணங்கள் உண்டு. இச்சாசக்தி, கிரியாசக்தி, ஞானசக்தி என்பவர் ஒரு பகுதியினர். இன்னும் ஜயா, விஜயா, அஜிதா, அபராஜிதா, நித்யா, விலாசினீ, தோத்திரீ, அகோரா, மங்களானனு என்பவர்கள் நவசக்திகள் எனப் பெயர்பெற்றவர்கள். ஒன்பது இரவும் வேறொரு செயலுமின்றித் தேவியைத் துதித்தலே தேவி பூசையின் சிறப்பம்சமாகும்.

'ஸௌந்தர்ய லஹரீ' என்பது அழகின் அலையாகும். தேவியின் உருவம் கருணை, அன்பு, செயல் முதலிய எல்லாம் அழகு அழகு அழகு. அவள் அழகுமயம். எனவேதான் அவளைத் திரிபுரசுந்தரி எனப் போற்றுகிறார்கள்.

தேவியின் திருவருள் நமக்குத்தான் சொந்தம் என்பதில்லை; நம் முன்னோர் மிலேச்சர் எனக் கருதிய மேற்கு நாட்டவருள் யோண் உட்டாவ், பீற்றேர்ஸ் முதலானோரும் தேவியைக் கண்ணாரக்கண்டு திருவருள் பெற்றுய்தியடைந்துள்ளனர். 'சர்வமங்களவடிவமானதாயே! நீ, எல்லாவற்றையும் அனுகூலமாகச் செய்தருள்கின்றாய்' என்று அவர்கள் போற்றியுள்ளார்கள்.

[6-ம் பக்கம் பார்க்க]

# மக்கள் கருத்து

### மின்விநியோக சீர்கேடு

கொக்குவில் கிராமசபை எல்லைக்கு உட்பட்ட சிலபகுதிகளில் கடந்த சிலமாதங்களாக மின்விநியோகம் மிகவும் சீர்கெட்ட நிலையில் காணப்படுகிறது. அரசாங்கம் முன்னர் மின்வெட்டை ஒரு குறிப்பிட்ட நேரத்தில் மட்டும் அமுல் செய்திருந்தது. ஆனால் எமது பகுதியில் இந்த மின் தண்டிப்பு அடிக்கடி ஏற்படுவது சர்வசாதாரணமாகிவிட்டது.

கடந்த சில வாரங்களாக கொக்குவில் கிராமசபைக்கு அண்மையில் உள்ள உபமின்வலு நிலையத்திலிருந்து மின் வழங்கப்பட்டுவரும் உடையார் ஒழுங்கை, புகையிரதவீதி மற்றும் கோவில் வீதியில் இருந்து நாமகள் ஒழுங்கைவரை உள்ள பகுதியிலும் இன்னும் சில பகுதிகளிலும் இரவு 6 மணியிலிருந்து இரவு 9 மணிவரை மிகவும் குறைந்த வெளிச்சமே காணப்படுகிறது. இது சில மெழுகுவர்த்திகள் தரும் ஒளியிலும் குறைந்த ஒளியையே தருவதால் வாசிக்கவோ, மின்சாதனங்களான மின் அழுத்தி வானொலி, மின் அடுப்பு போன்

[6-ம் பக்கம் பார்க்க]

## இன்று காந்தியடிகள் பிறந்ததினம்

# ஒரு புனிதஉயிர்த்துறவி



இந்திய நாட்டு அரசியலில் ஒரு பெரிய புரட்சியையும், மிகப் பல சீர்திருத்தங்களையும் நிகழ்த்திப் பெருவெற்றி கண்டவர் காந்தியடிகள். கத்தியின்றி இரத்தமின்றி சத்தியத் துணைகொண்டு யுத்தம் நடத்தினார். சத்தியாக்கிரகம் என்னும் அறப்போர் நிகழ்வதற்கு அவரே முதன்முதலில் வழிவகுத்தார். தீண்டாமை ஒழிப்பு, மதுவிலக்குப் போன்ற சீர்திருத்தத் திட்டங்களை வற்புறுத்தி நடைமுறைக்குக் கொண்டுவந்தார். தமது ஆக்கப் பணியாகப் பொருளியலில் கதருடை இயக்கத்தையும், சமுதாய இயலில் தீண்டாமை ஒழிப்பையும் ஒழுக்க இயலில் மதுவிலக்கையும் அடிகளார் அரிதின் ஆய்ந்து வகுத்தார்.

### வாய்மை

112 வருடங்களுக்கு முன் இந்திய நாட்டில் பிறந்த ஒரு குழந்தை, இன்று உலகத்தார் உள்ளங்களில் எல்லாம் சிறப்புற்று விளங்குவதின் காரணம் யாது?

முனிவர் இக்கேள்விக்கு விடை பகருகின்றார்.

"உள்ளத்தாற் பொய்யாது ஒழுகின்
உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் உளன்."

"தெய்வீக ஒளிபெற்ற இம் மனிதர் தம்முடைய வாழ்நாளிலேயே உலகம் எங்கணும் உள்ள பல கோடிக்கணக்கான மனிதர்களின் உள்ளங்களில் நிலையான இடம்பெற்று நிகரற்று விளங்குகிறார்" என்று ஜவகர்லால் நேரு காந்தியடிகளைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்.

### கடவுளுணர்வு

கடவுளுணர்ச்சியில் காந்தியடிகள் மிகவும் தலைசிறந்திருந்தார். "எனது தேசபக்தி என்னுடைய சமயத்திற்குக் கீழ்ப்பணிந்து செல்வதே ஆகும்" என்று அவர் அருளிச்செய்தார். காற்றும் நீரும் இன்றிக்கூட நான் உயிர்வாழ்வேன்; ஆனால் கடவுளை நினைவு இன்றி வாழ என்னால் ஒருசிறிதும் இயலாது. இறைவனின் உண்மையில் எனக்குள்ள உறுதியானது, இமயமலையைப் போல் அசைக்க முடியாததாகவும், அதன் கொடுமுடிகளில் உள்ள பனிப்படலங்களைப் போலத் தூயதாய்த் தெளிவாகவும் உள்ளது. கடவுளுணர்ச்சி இல்லாமற்போனால் நான் கிறுக்குப் பிடித்த பித்தனாகிவிட்டிருப்பேன்" என்பது அடிகளின் கனிவுரை.

### ஒழுக்கத்தின் விழுப்பம்

அறிஞர்களிற் பலர், அரசியலுக்கும் தனிமனிதனின் ஒழுக்கத்திற்கும் எத்தகைய தொடர்பும் இல்லையென்றே நெடுங்காலமாகக் கருதியும் கூறியும் வந்தனர். ஆனால் காந்தியடிகள் மனிதவாழ்வின் எல்லாத்துறைகளிலும் ஒழுக்கம் மிக மிக இன்றியமையாதது என வலியுறுத்தினார்; அங்ஙனமே வாழ்ந்து காட்டினார்.

### உயிராற்றல்

வாளை எடுத்தவன் வாளாலேயே மடிவான், படைபலத்தைவிட ஆன்ம பலமே மேலானது. உண்மையில்

-ந. ரா. முருகவேள்-
(ஆசிரியர் 'திருக்கோவில்')

பாரதியார் பாடியது போல அச்சமென்பதில்லையே என்று ஒவ்வொரு இந்திய ஏழையும் உணர்வும் உற்சாகமும் கொள்ளச் செய்தவர் அண்ணல் காந்தி அவர்களே!

### சான்றாண்மை

தென்னாபிரிக்காவில் தம்மைச்சிறையில் அடைத்த ஜெனரல்ஸ் மட்ஸ் அவர்களையும் காந்தியடிகள் பெரிதும் நேசித்தார். தமது ஆன்ம பலத்தால் அவருடைய படைபலத்தை வெற்றி கொண்டார்.

தென் ஆபிரிக்காவில் அவருடைய சிறந்த பணியைக்கண்ட கோபாலகிருஷ்ண கோகலே 'களிமண்ணிலிருந்து வீரநாயகர்களை உருவாக்கியவர் காந்தி' என்று மெச்சினார்.

இன்று பிரதமர் இந்திரா காந்தி "இந்தியமக்கள் மீண

[6-ம் பக்கம் பார்க்க]

### சீ-நோர் 14 ஆண்டுகள்

காரைநகர் சீ-நோர் திட்ட பதினான்கு ஆண்டுச் 'சாதனை' குறித்து 'ஈழநாடு' கள ஆய்வுக் குழுவின் கண்டுபிடிப்புகள், ஏதோ ஒரு வகையில் உடனடி மாற்றத்தை ஏற்படுத்தி யிருப்பதாக நாம் அறிகின்றோம்.

இத்தொடர் கட்டுரையின் எதிரொலியாக மேற்படித் திட்டத்தின் தலைமைப் பீடத்தில் சில மாற்றங்கள் நடைபெறுவதாக எமக்குத் தகவல் கிடைத்திருக்கிறது நல்லவை நடக்கட்டும்.

சீ-நோர் கட்டுரை நாளை தொடரும்.

## பார் போற்றும் மகாத்மா

பாரதத்தின் இலக்கியங்கள் படைத்துவைத்த
பண்பெல்லாம் ஒருங்கே கூடிச்
சீரமைய எடுத்ததுவோர் வடிவென்கோ?
அடிமையெனும் இருளில் மூழ்கிப்
பேரிடரால் நலிவுற்ற இந்தியர்தம்
துயர்துடைத்த கதிர்தான் எங்கே?
பாரனைத்தும் ஒருங்கேத்தப்புகழ் விளைத்த
மகாத்மாவை யாது சொல்வேன்?

எவ்வுயிர்க்கும் அன்புசெய்தல் இனியனவே
சிந்தித்தல் ராம நாமம்
செவ்விதினே உச்சரித்தல் பாரதத்தின்
நிலைஉயர உழைத்துக் கொள்ளல்
தெவ்வரையும் நேசித்தல் எளிமையிலே
தன்வாழ்வை அமைத்துக்கொள்ளல்
இவ்விதமே வாழ்ந்த மகான் காந்தியினைப்
பின்பற்றல் இனிதே அன்றோ?

— ம. பார்வதிநாதசிவம்

# 12,000 தி.மு.க. தொண்டர்கள் கைது!

## அழகிரி விடுதலையானர்

சென்னை, அக். 1.

தி. மு. க. தலைவர் திரு மு. கருணாநிதியை விடுதலை செய்ய வேண்டுமென்றுகோரி தி. மு. க. தொண்டர்களுடன் சேர்ந்து வன்செயல்களிலீடுபட்டு பொதுச் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தார் என்ற குற்றச்சாட்டின்பேரில் கடந்த மாதம் 20 திகதி கைது செய்யப்பட்ட 'முரசொலி' பத்திரிகையின் அதிபர் திரு மு. க. அழகிரி நேற்று விடுதலை செய்யப்பட்டார்.

கடந்த மாதம் 15ம் திகதி தி மு க தலைவர் திரு மு கருணாநிதியுடன் கைதுசெய்யப்பட்ட தி மு க தொண்டர்களை தமிழ்நாடு அரசு விடுதலை செய்துவருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

குறிப்பிட்ட குற்றச்சாட்டுக்களுக்காக கைது செய்யப்பட்டவர்கள் விடுதலைசெய்யப்படமாட்டார்களென பொலிசார் தெரிவித்தனர்.

இதுவரை சுமார் 12,000 தி மு க தொண்டர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக தி மு க வட்டாரங்கள் தெரிவித்தன.

தி மு க தலைவர் திரு மு கருணாநிதி கடந்த மாதம் 15ம் திகதி கைதுசெய்யப்பட்டு சென்னை மத்திய சிறையில் காவலில் வைக்கப்பட்டு 29ம் திகதி விடுதலை செய்யப்பட்டது தெரிந்ததே. (வெ)

### அகதிகள் பிரச்னை பேச்சுவார்த்தை

புதுடில்லி, அக். 1

பங்களாதேஷின் சிட்டகாங் பிரதேசத்திலுள்ள பழங்குடி மக்கள் திரிபுராவிற்குள் அகதிகளாக வந்து கொண்டிருப்பது தொடர்பாக பங்களாதேஷ் அரசும் இந்திய அரசும் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளன. (வெ)

### விசேட சேவை உத்தியோகத்தர் பதவிஏற்றனர்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு தொகுதி விசேட சேவை உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள். தொகுதியிலுள்ள 41 கிராம சேவகளர் பிரிவிலும் மொத்தம் 21 பேர் நியமிக்கப்பட்டுள்ளார்கள். இவர்கள் அந்தந்த உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்தில் கடமைபுரிந்துவருகின்றனர்.

கற்குடா, பட்டிருப்புத் தொகுதிகளுக்கான நேர்முகப் பரீட்சை நடைபெற்றபோதிலும் இதுவரை நியமனம் செய்யப்படவில்லை.

### எமது பகுதிகளைப் பாதுகாக்க வேண்டியதே முதற் கடமையாகும்

#### மா. அ. சபை உறுப்பினர் கூறுகிறார்

(புலோலி)

"இன்றைய நிலையில் எமது பகுதிகளைப் பாதுகாக்கவேண்டியது எமது முதற்கடமையாகவும், அவசியமாகவும் உள்ளது. இதனைக் கருத்திற்கொண்டே பாதுகாப்புக்குழுக்களை அமைத்து எமது பகுதிகளின் பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பலப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன."

இவ்வாறு பருத்தித்துறை இன்பருட்டி கிராம அபிவிருத்திச் சங்க சனசமூக நிலைய இவ்வாண்டு நிறைவு விழாவிலே பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய யாழ். மாவட்ட அபிவிருத்திச்சபை உறுப்பினர் திரு. மு. தம்பிமுத்து குறிப்பிட்டார். இன்பருட்டி கடற்கரை மைதானத்தில் தலைவர் திரு. என். சிவபாதசுந்தரம் (அதிபர்) தலைமையில் நடைபெற்ற இவ்விழாவிலே தொடர்ந்து உரையாற்றிய திரு. தம்பிமுத்து குறிப்பிட்டதாவது:

எமது நாடு இளைஞர்களின் கைகளிலேயே இருக்கின்றது. எனவே இளைஞர்கள் ஒற்றுமையுடனும் கட்டுக்கோப்புடனும் செயற்பட்டு எமது நாட்டின் முன்னேற்றத்திற்கு வழிகோலவேண்டும்.

கிராமிய பொருளாதார அபிவிருத்தித்துறைகளில் நாம் அதிக கவனம் செலுத்தவேண்டும். இதன்மூலம் கிராம மக்களின் வாழ்க்கை வசதிகளை மேம்படுத்தி அவர்களுக்கு சுபீட்ச வாழ்வைத் தேடிக்கொடுப்பதுடன், எமது பகுதிகளின் அபிவிருத்தி நடவடிக்கைகளையும் மேற்படுத்தமுடியும்.

விழாவுக்குத் தலைமைவகித்த சங்கத் தலைவர் திரு. என். சிவபாதசுந்தரம் உரையாற்றும் போது குறிப்பிட்டதாவது:

"எமது பகுதிகளின் நடவடிக்கைகளை நாமே சிறப்பாகச் செயற்படுத்தவேண்டும் என்பதைக்கருத்திற்கொண்டே இந்த இன்பருட்டி கிராம அபிவிருத்திச் சங்கமும், சனசமூகநிலையமும் சிறப்பாக இயங்கிவருகின்றன.

யாழ். மாவட்டத்திலேயே சிறந்த கடற்றொழிலாளர்களைக் கொண்டவர்கள் இன்பருட்டியில் இருந்துவருகின்றபோதும் அவர்கள் கடற்றொழிலை மேற்கொள்வதற்கும் போதிய வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை. இதற்கு மாவட்ட அபிவிருத்திச்சபை உறுப்பினர் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்." (இ)

### கிருஷ்ண ஜெயந்தி பேச்சுப்போட்டி

[கோண்டாவில்]

ஸ்ரீ இராமகிருஷ்ண ஜெயந்தி விழாவை முன்னிட்டு அகில இலங்கை ரீதியில் ஸ்ரீ இராமகிருஷ்ண சேவாச்சிரமத்தினரால் நடாத்தப்பட்ட பேச்சுப் போட்டியில் பரிசுபெற்றவர்களுக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெற்ற ஸ்ரீ இராமகிருஷ்ண ஜெயந்தி விழாவில் வழங்கப்பட்டது.

கீழ்ப்பிரிவில் பா. சேதீஸ்வரன் (யாழ். இந்து கனிஷ்ட பாடசாலை), வி. மாலினி (கோண்டாவில் ஸ்ரீ இராமகிருஷ்ண சேவாச்சிரமம்).

மத்திய பிரிவில் சே. விக்கினேஸ்வரன் (யூனியன் கல்லூரி) ப. ஜெயந்தி (யூனியன் கல்லூரி)

மேற்பிரிவில்: அ. பார்த்திபன் (அருணோதயக் கல்லூரி), ப. நிர்மலா (யூனியன் கல்லூரி)

அதிமேற்பிரிவு பெருஞ்சன் (யூனியன் கல்லூரி), த. இரஞ்சன் (யூனியன் கல்லூரி) ஆகியோர் முதற்பரிசில்களைப் பெற்றுக்கொண்டனர். [இ]

### வல்லிபுர ஆழ்வார் வருடாந்த உற்சவம்

(புலோலி)

சரித்திரப்பிரசித்தி பெற்ற விஸ்ணு ஆலயமான ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய வருடாந்த மகோற்சவம் கடந்த மாதம் 28 ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

இம்மாதம் 12ம் திகதி இரதோற்சவமும் 13ம் திகதி கடல் தீர்த்த உற்சவமும், மறுநாளான 14ம் திகதி கேணித் தீர்த்த உற்சவமும் நடைபெறவுள்ளது.

### சங். கார்மாலிற்று இலங்கை விஜயம்

[உடுப்பிட்டி]

கார்மேல் கன்னியாஸ்திரிகள் சபையின் பெரியதாயார் சகி. சகோதரி எம். கார்மலிற்று இலங்கை வந்துள்ளார். இவருடன் இவரது செயலாளர் சகி.சகோ. எம். மொறிஸுவும் கூடவந்திருக்கிறார். (௪)

### மக்கள் அவதி

(மண்டைதீவு)

மண்டைதீவு உப அஞ்சல் நிலையத்திலிருந்து வெளியூர்களுக்கு தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ள முடியவில்லை, மக்கள் யாழ். பிரேஷ்ட அஞ்சல் அதிபருக்கு இது பற்றி முறைப்பாடு செய்துள்ளனர். [கு]

### ஈரானுக்கு வெளியிலான அரசு

தெஹ்ரான், அக். 1

ஈரானிய அரசாங்கத்தை எதிர்ப்பவர்கள் முன்னாள் ஜனாதிபதி ஜனாப் பானிசதர் தலைமையில் ஈரானுக்கு வெளியே அரசாங்கமொன்றை அமைத்துள்ளதாக அறிவிக்கப்பட்டது.

இவ் அரசாங்கத்தின் பிரதம மந்திரியாகத் தான் நியமிக்கப்பட்டுள்ளதாக இடதுசாரி முஜாஹிதீன் இயக்கத்தின் தலைவர் நேற்று பாரிஸில் தெரிவித்தார். (வெ)

### பொதுநல அமைப்பு உச்சிமாநாடு

மெல்போர்ன், அக். 1

மெல்போர்னில் நடைபெற்றுவரும் பொதுநலவமைப்பு நாடுகளின் உச்சிமகாநாட்டில் வளர்முகநாடுகள் வளர்ச்சியடைந்த நாடுகளின் பொருளாதார ஒத்துழைப்பு, நமீபியா பிரச்னை, தென்னாபிரிக்க விவகாரம் ஆகியவை பற்றி பொதுநலவமைப்பு நாடுகளின் தலைவர்கள் இன்று கலந்துரையாடவுள்ளனர். (வெ)

### ஆலோசனை கூட்டம்

[உடுப்பிட்டி]

சக்தி அமைச்சின் வெள்ளை அறிக்கைசம்பந்தமான ஆலோசனைக்கூட்டம் ஒன்று இன்று வெள்ளிக்கிழமை மாலை கொழும்பு பேராயர் இல்லத்தில் நடைபெறவுள்ளது. கொழும்பு துணைஆயர் அதி. வந். ஓஸ்வால்ட் கோமிஸ் ஆண்டகை இதற்கான ஒழுங்குகளைச் செய்துள்ளார். [௪]

### கண்ணை இழந்தவர் மீண்டும் ஒளிபெற நிதி உதவி

(அரியாலை)

அந்தகரான மட்டுவிலைச் சேர்ந்த திரு. மு. மகாலிங்கம் இந்தியாவுக்குச் சென்று கண் சிகிச்சை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை குடும்பத்திட்ட சங்க கிராமிய ஒன்றிணைக்கப்பட்ட குடும்பநலத் தொண்டர்கள், இதற்கென இதுவரை நாலாயிரம் ரூபா திரட்டியுள்ளனர். இலங்கை குடும்பத்திட்ட சங்கமும் மூவாயிரம் ரூபா வழங்கமுன்வந்துள்ளது.

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரால் நடாத்தப்பட்ட இலவச கண்வைத்திய பரிசோதனையின்போது இந்திய கண் சிகிச்சைநிபுணர்கள் இவரைப் பரிசோதித்து, கண்பார்வையளிக்க முடியுமென்றும், இந்தியாவுக்கு வருமாறும் கூறியிருந்தனர். [௪]

### முகமாலை கொலை வழக்கு நீதிபதியினுல் சாட்சி எச்சரிக்கப்பட்டார்!

(பளைப்பள்ளி)

காங்கேசன்துறை சீமெந்துக் கூட்டுத்தாபன லொறிச் சாரதியின் கொலை வழக்கில் சாட்சியான லொறிக் கிளீனர் நீதிபதியினால் எச்சரிக்கப்பட்டார்.

காங்கேசன்துறை லொறிச் சாரதியான செல்லப்பா விஜயரத்தினம் கடமையிலீடுபட்டுக்கொண்டிருக்கும்போது முகமாலையில் வைத்து கொலை செய்ததாக தர்மலிங்கம், சிவராசா ஆகிய இருவருக்கெதிராகப் பளைப் பொலிசாரால் தாக்கல்செய்யப்பட்ட வழக்கு பளை சுற்று நீதிமன்றத்தில் நீதிபதி திரு. க. வி. விக்கினேஸ்வரன் முன்னிலையில் நடைபெற்றது.

கொலையுண்டவருடன் சம்பவம் நடந்தபோது, சேர்ந்து கடமையாற்றிய லொறிக் கிளீனரான சி. தம்பிராசா எதிரி தரப்பு சட்டத்தரணியினால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோது ஒரு சந்தர்ப்பத்தில் எதிரிகளின் பெயர்களைக் குறிப்பிட்டுச் சாட்சியமளித்ததை அவதானித்த நீதிபதி "எதிரிகளின் பெயர்கள் உமக்கு எப்படித்தெரியும். எதிரிகள் சார்பில் யாராவது உம்மைச் சந்தித்தார்களா? நீதிமன்றத்தில் உண்மையைச் சொல்லவேண்டும். இல்லையேல் எதிரிகளுக்கு முதல் நீர் தான் தண்டனையைப் பெறவேண்டிவரும்" என எச்சரித்தார்.

இவ்வழக்கில் முறைப்பாட்டுக்காரர் சார்பில் பொலிஸ் உத்தியோகத்தர் திரு ". சூரியப்பிரகாசத்தின் அனுசரணையுடன் சட்டத்தரணி சே. அம்பிகைபாலனும், எதிரிகள் சார்பில் சட்டத்தரணி சுரேந்திரனின் அனுசரணையுடன் சட்டத்தரணி எஸ். சிவலோகநாதனும், ஆஜரானார்கள். (க)

### சிறந்த ஆசிரியர் என்பவர் யார்?

பிரியாவிடையில் விளக்கம்:

"கடமையுணர்வுடனும், சேவை மனப்பான்மையுடனும் சேவையாற்றும் ஆசிரியர்கள் என்றும் மாணவர்களாலும், அவர்களது பெற்றோராலும் மதிக்கப்படுவார்கள். மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் சிறந்த கரிசனை எடுத்து பணியாற்றும் ஆசிரியரே சிறந்த ஆசிரியராவார்" என்று நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்கினேஸ்வர வித்தியாலயத்தில் ஆங்கில ஆசிரியராகப் பணிபுரிந்து யாழ். இரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்திற்கு இடமாற்றம் பெற்றுச்சென்றுள்ள ஆசிரியை திருமதி சின்னராசாவுக்கு ஸ்ரீ விக்கினேஸ்வர வித்தியாலய மண்டபத்தில் மாணவர்கள் ஆசிரியர்கள் சார்பில் அளிக்கப்பட்ட பிரியுபசார வைபவத்திற்குத் தலைமை வகித்துப்பேசிய அதிபர் திரு கணபதிப்பிள்ளை குறிப்பிட்டார்.

திருமதி. இரத்தின சிங்கம் ஆசிரியை ஆசிரியர்கள் சார்பில் சேவைநலம் பாராட்டிப் பேசினார்.

### வெற்றி தோல்வி இல்லை

(அரியாலை)

விளையாட்டுத்துறை அமைச்சினால் மாவட்டங்களுக்கிடையே நடாத்தப்படும் உதைபந்தாட்டப்போட்டியில் யாழ்ப்பாணக்கோஷ்டியும் கல்முனைக் கோஷ்டியும் யாழ். குருநகர் மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் கலந்து கொண்டன.

இருகோஷ்டிகளும் தலா 2:2 கோல்களைப்போட்டுச் சமமாகிக் கொண்டன. போட்டிக்கு திரு. தேவதாஸ் மத்தியஸ்தம் வகித்தார்.

### நெல் விநியோகம்

(மண்டைதீவு)

மண்டைதீவுப்பகுதியில் பதிவு செய்யப்பட்ட நெற் சமக்காரர்களுக்கு எஸ். பெர. விதைநெல் வேலணை விவசாய விரிவாக்க அலுவலகத்தில் வைத்து குறைந்த விலையில் மேற்படி திணைக்கள உத்தியோகத்தர்களால் வழங்கப்பட்டுவருகின்றது. (கு)

### சம முடிவு

(அரியாலை)

யாழ்.பரியோவான் கல்லூரி 3ம் பிரிவு உதைபந்தாட்டக் கோஷ்டிக்கும், பாஷையூர் புனித அந்தோனியார் விளையாட்டுக்கழக 3ம் பிரிவுக்குமிடையில நடைபெற்ற உதைபந்தாட்டப்போட்டியில் இரண்டு கோஷ்டிகளும் தலா 1:1கோல்களைப்போட்டுச் சமமாக்கிக் கொண்டன.

யாழ். பரியோவான் கல்லூரி மைதானத்தில நடைபெற்ற போட்டிக்கு திரு. எம் அந்தோனிப்பிள்ளை மத்தியஸ்தம் வகித்தார். (அ)

### உதைபந்தாட்டப் போட்டி முடிவு

(அரியாலை]

யாழ். பரியோவான் கல்லூரி 1ம், 2ம் பிரிவு உதைபந்தாட்டக் கோஷ்டிக்கும், அரியாலை ஸ்போட்ஸ் கிளப் 1ம், 2ம் பிரிவு உதைபந்தாட்டக் கோஷ்டிகளுக்கு மிடையில் உதைபந்தாட்டப்போட்டி யாழ். பரியோவான் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

முதலாம்பிரிவுக்கான போட்டியில் 2:1 கோல்களால் அரியாலை ஸ்போட்ஸ் கிளப் வெற்றியீட்டியது.

இரண்டாம் பிரிவுக்கான போட்டியில் பரியோவான் கல்லூரிக் கோஷ்டி 3:1 கோல்களால் வெற்றியீட்டியது. திரு. என். எஸ். தனபாலன் மத்தியஸ்தம் வகித்தார்.

# "தமிழ் மாணவர் விஞ்ஞான அறிவு பெற வழிகாட்டியாகத் திகழ்ந்தார்"

(யாழ்ப்பாணம்)

"இலக்கியத்திற்கு வள்ளுவன், கம்பன், இளங்கோ, பாரதி போல் இரசாயனத்திற்கு சாம் அல்பிரெட் எனுமளவுக்கு ஆற்றலும் அனுபவமும் அறிவூட்டலும்கொண்டு விளங்கியவர் அமரர் சாம். இவரது இருபத்தாறு வருடகால ஆசிரிய சேவையில் அவர் ஒழுக்கத்திற்கும் கட்டுப்பாட்டிற்கும் முதலிடம் கொடுத்து ஒரு சிறந்த சமுதாயத்தை உருவாக்கினார்"

இவ்வாறு பௌதீக ஆசிரியர் திரு. ஜெறுட் சம்பத்திரிசியார் கல்லூரியில் இருபத்தாறு வருடங்கள் பணியாற்றி அண்மையில் அமரரான சாம் அல்பிரெட்டின் உருவப்படத் திரைநீக்க வைபவத்தில் பேசுகையில் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில்: 'பல்கலைக் கழகங்களில் அவருக்கென்று ஒரு தனியான மதிப்பு நிலவியது. இக்கல்லூரி மாணவர் மட்டுமல்ல கடந்த கால் நூற்றாண்டு காலமாக தமிழ் மாணவர்கள் அனைவருமே விஞ்ஞான அறிவுபெறுவதற்கு அவர் வழிகாட்டியாக இருந்தார் என்றும் கூறினார்.

அதிபர் அருட்திரு மைக்கல் யோசவ் அடிகள் தமது உரையில், "நாம் இக்கல்லூரியை முன்னேற்றவென பல திட்டங்களைத் தீட்டினோம். நாம் ஒன்றை நினைக்க இறைவனின் சித்தம் வேறு விதமாக அமைந்துவிட்டது. ஆசிரியர்களுக்கே உதாரணமாகத் திகழ்ந்த சாம் அமரராகிவிட்டார். எனினும், இக்கல்லூரிக்கு புகழையும் அறிவையும் ஆற்றலையும் உருவாக்கும் சக்தியாக மாறி அவர் எம்முடனேயே வாழ்ந்துகொண்டே யிருப்பார்" என்றார்.

அதிபர் அருட் திரு. மைக்கல் யோசவ் அடிகளார் சாம் அல்பிரெட்டின் உருவப் படம் திரை நீக்கம் செய்துவைக்கப் பட்டது. சம்பத்திரிசியார் ஆசிரிய சங்கத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட இவ்விழாவுக்கு ஆசிரியர் திரு. அகஸ்டீன் தலைமைதாங்கினார். (இ-இ)


**வெஸ்லி** (மானிப்பாய்)
தினசரி 2-30, 6-30
எம். ஜி. ஆர்.
நடித்த
உலகம் சுற்றும்வாலிபன்

**ஹரன்** (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர்- ஜமுனா
குழந்தையும் தெய்வமும்

**நாகம்ஸ்** (சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி-ஸ்ரீதேவி
பட்டாக்கத்தி பைரவன்

**மனோகரா** (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 4-45
7-00, 9-30
WRESTLING QUEEN
(Best Wrestling Film)

**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவகுமார்-லட்சுமி
அவன்-அவள்
அது (சுவட்டமன் கலர்)

**லிடோ** (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
அலாவுதீனும்
அற்புதவிளக்கும்

**ராணி** (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
சுதாகர், பாக்கியராஜ், சுமதி
மற்றும் பலர் நடித்த
சுவர் இல்லாத சித்திரங்கள்

7 வது வாரம்
**ஸ்ரீதர்** (யாழ்நகர்) தினசரி 10-30, 2-30, 6-15, 9-30
மஞ்சுபார்கவி ... துளசிராம்
சங்கராபரணம் (கலர்)

**சாந்தி** (யாழ் நகர்) 3வதுபரபரப்பூட்டும்ஹவுஸ்புல் வாரம்
தினசரி4 காட்சிகள்
கமல்...
ஸ்ரீதேவி...
குரு
நம்பியார்
வெண்ணிறஆடை
நிர்மலா- முத்துராமன்-
சுந்தரராஜன்
தென்னகத்தில் மிகுந்த பரபரப்பூட்டிய வண்ண ஓவியம்

**ராஜா** (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-15, 6-00, 9-30
மேஜர் சுந்தரராஜன் - நாகேஷ்
ஜெயலலிதா -- ஏ.வி.எம். ராஜன்
மேஜர் சந்திரகாந்த்
இந்தியாவில் இருந்து வரவழைக்கப்பட்ட
புத்தம் புதிய

**WINDSOR** JAFFNA
Daily at 10-30 a.m., 2-00, 4-30, 7-00 & 9-30 p.m. only
2-10-81
Terrence Hill, Valerie Perrine in
"Mr. BILLION"
Color - Action, Excitement and Romance
5-10-81
"Hannie Caulder"
Adults only
ஸ்டைல் மன்னன் ரஜனியின் "காளி"
விரைவில் எதிர்பாருங்கள்


## நூல்மதிப்பீடு

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

அ. ஸ. அப்துஸ்ஸமது B. A. [விவரணம்], பண்டிதர் ச. மயில்வாகனன் [ஒப்பீட்டுப் பண்பாய்வு] ஆகியோர் எளிய தமிழில் இலகு நடையில் தத்தம் கருத்துக்களைக் கோத்துள்ளனர். க. பொ. த. ப. (சாத/த) வகுப்பு மாணவர்களுக்கு இக்கட்டுரைக்கோவை பெரும் பயன்தரும் என்பதற்கையமில்லை.

சி. சரவணபவன்
[இதபி]

## இடைநிறுத்தம்

[மன்னார்]

மன்னார் மாவட்டத்தில் சேற்கொள்ளப்பட்டு வந்த வரட்சி நிவாரண வேலைகள் இடைநிறுத்திவைக்கப்பட்டன.

தற்போது பருவமழை பெய்துவருவதால் காலபோக விவசாயத்தை மேற்கொள்ளும் பொருட்டு வரட்சி நிவாரண வேலைகள் இடைநிறுத்திவைக்கப்பட்டுள்ளது. [அ]

## விளையாட்டு மைதானம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைத் தொகுதியில் நவீன வசதிகள் கொண்ட புதிய விளையாட்டு மைதானம் ஊர்காவற்றுறை அரசினர் வைத்தியசாலைக்கு எதிரில் உருவாக்கப்படவுள்ளது.


**REGAL** றீகல்
இன்று முதல்
ஐப்பசி 16 வரையும்
தினசரி
10-30, 2-15, 4-45, 7-15,
9-45




தங்க துப்பாக்கியாவிக்கும்
007 ஜேம்ஸ் பொண்ட்


# 'வெண்கட்டி உற்பத்தியை ஊக்குவிக்க வேண்டும்'

[மட்டுவில்]

"யாழ். பல்கலைக் கழகம், மற்றும் இப்பகுதிகளில் உள்ள பாடசாலைகள், தனியார் கல்வி நிலையங்கள் போன்ற அனைத்தும், இந்த மாதர் சங்கத்தினால் உற்பத்தி செய்யப்படும் வெண்கட்டிகளைப் பாவித்து இந்த உற்பத்தியை ஊக்குவிக்கவேண்டும்"

இவ்வாறு தென்மராட்சிப் பகுதி அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. சே இராஜரத்தினம் மட்டுவில் மாதர் சங்கத்தின் குடிசைக் கைத்தொழிலான வெண்கட்டி உற்பத்தி தொழிற்சாலை திறப்புவிழாவில் உரைநிகழ்த்துகையில் கூறினார்

மட்டுவில் மாதர் சங்கத்தின் குடிசைக் கைத்தொழிலான வெண்கட்டி உற்பத்தி தொழிற்சாலையை, இலங்கை கிராமிய மீளமைப்பு நிறுவன இயக்குனர் திரு பி. சே. பொன்னம்பலம் திறந்துவைத்தார் (க)

## யாழ். மத்திய கல்லூரி விளையாட்டரங்கு

# "சகல பாடசாலைகளுக்கும் பயன்படவேண்டும்"

(சுண்டிக்குளி)

யாழ் மத்திய கல்லூரிக்கு கிடைத்துள்ள இவ்விளையாட்டரங்கு மேற்படி கல்லூரிக்கு மட்டுமன்றி யாழ் மாவட்டத்தின் சகல பாடசாலைகளுக்கும் பயன்படுத்தப்படும். இவ்விளையாட்டரங்கு யாழ் விளையாட்டு ரஸிகர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும்."

3 லட்சம் ரூபா செலவில் யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் நிறுவப்படவிருக்கும் நவீன விளையாட்டு அரங்கிற்கான அடிக்கல்லை நாட்டிவைத்துப் பேசிய யாழ் முதல்வர் திரு ஆர் விஸ்வநாதன் மேற்கண்டவாறு கூறினார்.

யாழ். மாவட்ட கல்வி அதிகாரி திரு. இ. இராசநாயகம் மங்கல விளக்கேற்றி வைத்தார்

இவ்விளையாட்டு அரங்கிற்கு விளையாட்டுத்துறை அமைச்சு இவ்வாண்டுக்கான செலவுத்தொகை 50 ஆயிரம் ரூபாவை ஒதுக்கீடுசெய்துள்ளது. யாழ் மாவட்டத்தில் இவ்வரங்கு இரண்டாவது பெரிய விளையாட்டு அரங்காக அமையப் போகின்றது. (க)

## பஸ்சேவை சீர்கேடு

(மண்டைதீவு)

அல்லைப்பிட்டி ஊடாக மண்கும்பான் வேலணைக்கு செல்லும் பஸ்சேவை தற்போது ஒழுங்காக நடைபெறுவதில்லை.

இப்பகுதிக்கு ஒரு பஸ் வண்டியே சேவையில் ஈடுபடுவதாலும், வேறுவாகன வசதிகள் இல்லாத காரணத்தாலும் பொதுமக்கள் இப்பஸ்சேவை சீர்கேட்டால் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர்.

## விதைநெல் வழங்கஏற்பாடு

[புளியங்குளம்]

கனகராயன்குளம் கமநல சேவைப் பிரிவிலுள்ள சகல விவசாயிகளுக்கும் காலபோக நெற்செய்கைக்குத் தேவையான விதை நெல்லை வழங்குவதற்கும், அப்பகுதியிலுள்ள குளங்களின் நீர்ப்பாசன முறையை வகுப்பதற்குமான ஒழுங்குகள் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

## ஆராதனை

(அரியாலை)

பரிசுத்த மத்தேயு திருநாளை யொட்டிய ஆராதனை, சுண்டிக்குளி பரிசுத்தயோவான் ஆலயத்தில் நடைபெற்றது. அருட்திரு ஜே சர்வானந்தம் அடிகளார் அருளுரை நிகழ்த்தினார் (க)

# இன்றைய பலன்

புரட்டாதி மாதம் 16 ம் திகதி

வெள்ளிக்கிழமை

2 - 10 - 81

மேடம்: குடும்பத்தில் குறைகேட்க நேரிடும், மறைமுகமாக நடத்திய காரியம் ஒன்று இன்று அம்பலமாகலாம். சிலருக்கு விரக்தி மனப்பான்மையும் தென்படலாம்.

இடபம்: வாழ்க்கை கரும்புபோல் இனிக்கும், காதல் வட்டாரங்களில் கலகலப்பு தென்படும், இல்லத்திலும் சுப நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

மிதுனம்: நண்பர்களே உங்கள் முன்னேற்றத்திற்கு தடைக்கல்லாக அமைவார்கள், மொட்டைக் கடிதமொன்று சிறிது பரபரப்பை ஏற்படுத்தும், தொழிலில் நஷ்டம்.

கடகம்:- மகிழ்ச்சிகரமான செய்திக்கு இடமுண்டு, தெய்வ நம்பிக்கையில் ஆர்வம் பிறக்கும். நீண்டநாள் மனக்குறை இன்று நிவர்த்தியாகும்.

சிங்கம்: பதவியில் இருப்பவர்களுக்கு உயர்வு கிடைக்கலாம், சிலருக்குப் புதிதாகவும் தொழில் கிடைக்கமுடியும், வெளியிடத் தொடர்புகளுக்கு இடமுண்டு.

கன்னி: முயற்சியால் உயர்ச்சியுண்டு, பணவிவகாரங்களில் நல்ல திருப்பங்கள் காணப்படும், வெளியிடத்திலிருந்து நல்லசெய்தி கிடைக்கும் சுபயோகநாள்.

துலாம்: சிந்தனைகளின் தாக்குதல் உங்கள் உடல் நிலையைப் பாதிக்கும், மனதில் அமைதி குன்றும், திடீர் முடிவுகளைத் தவிர்த்துக்கொள்ளவும், தொல்லைகளுக்கு இடமுண்டு.

விருச்சிகம்: எக்கருமத்தையும் எண்ணித் துணிக, அவசரப்போக்கினால் அருமையான சந்தர்ப்பத்தை கோட்டைவிடக்கூடும், அதிக முதலீட்டைத் தவிர்த்துக் கொள்ளவும்.

தனுசு: இல்லம் இன்று கட்டி வெல்லம்போல் இனிக்கும், இன்சொல்லின்மூலம் மற்றவர்களைக் கவருவீர்கள், பொருள்துறையிலும் நல்ல முன்னேற்றம் காணப்படும்.

மகரம்: பொறுமையின் நிழல் உங்களைத் தொடரும், உதவி செய்யப்போய் உபத்திரவத்தைத் தேடிக்கொள்வீர் அரசபயத்துக்கு இடமேற்படலாம்.

கும்பம்: தெய்வநம்பிக்கையில் அதிக ஆர்வம் பிறக்கும், புண்ணிய ஸ்தலயாத்திரை யொன்று மேற்கொள்ளப் படும், உடல்நிலையில் நல்ல முன்னேற்றம் தென்படும்,

மீனம்: இதயத்தில் இனிமை தவழும், பகைவர்கள் பணிவர், வணிகர்களுக்கு வியாபார விருத்தியுண்டு, பொதுமக்களின் பாராட்டும் கிடைக்கும்.

சோதி - வாரிதி

திருமலை க. வேலுப்பிள்ளை

## இப்படியும் நடக்கிறது

பாடசாலைகளில் பாலியல் கல்வி போதிப்பது குறித்து கல்வி அமைச்சு ஆலோசித்து வருகிறது. காரணம் - பாடசாலை மாணவிகள் கர்ப்பமாகும் எண்ணிக்கை இப்பொழுது அதிகரித்து வருகின்றதாம்!

இதில் வேடிக்கை என்னவென்றால், பாலியல் கல்வி போதிக்கும் ஆசிரியர்களைத் தெரிவு செய்வதில் அமைச்சுக்கு சந்தேகம் பிறந்திருக்கிறது!

பாலியல் கல்வி ஆசிரியர்களாக சமய போதனாசிரியர்களை நியமித்தால் என்ன என்று அமைச்சு சிந்திக்கிறது!

—ஊடுருவி


## மரண அறிவித்தல்
### கார்த்திகேசு அரினேசரத்னம்

உடுவில் ஆலடியைச் சேர்ந்த கார்த்திகேசு அரினேசரத்னம் (ஓய்வு பெற்ற பொலிஸ் அதிகாரி) 1-10-81இல் காலமானார். இவர் நவாலியைச் சேர்ந்த பாக்கியம் அவர்களின் கணவரும், கௌரிகாந்தன், ஜெயக்குமார், ரவிக்குமார், சாந்தகௌரி, குகனேஸ்வரி, செல்வகௌரி ஆகியோரின் தந்தையும், சங்கரநாதன், மோகன்ராஜா ஆகியோரின் மாமனுருமாவார்.

ஈமைக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

'கௌரிவாசா', உடுவில், சுன்னாகம். (1121)



## WANTED RECEPTIONIST
(FEMALE)

Wanted a Receptionist with a PLEASING PERSONALITY and conversant in all THREE LANGUAGES. Should possess a minimum of 6 passes in the G.C.E. (O.L) Apply with Bio Data and two referees on or before 8 th October 1981;

SALES MANAGER,
THE FINANCE Co. Ltd.,
249 C, Power House Road, Jaffna.



## வெளிநாடு பயணமா?

உலகின் எப்பாகத்துக்கு
செல்லவேண்டுமானாலும்
யாழ்ப்பாணத்தில்
எங்களை நாடுங்கள்.

நம்பிக்கையான, பிரபல்யம் வாய்ந்த
MACKINNON MACKENZIE & Co
of CEYLON LIMITEDன்
யாழ்ப்பாணக்கிளை
விரும்பிய விமானத்தில ஆகக்குறைந்த கட்டணங்களில்

### விமான டிக்கட்டுகள்

சிங்கப்பூர் (ஒரு வழி) கூட்டாக செல்வோருக்கு
மேலும் விசேட கழிவு வழங்கப்படும்.

ஃ இலங்கையில் AMERICAN EXPRESS
பிரதிநிதித்துவம் பெற்ற மக்கினென்ஸ் இடம்
வங்கியில் அறவிடப்படும் அதே கட்டணத்தில்
(TRAVELLER CHEQUES) பிரயாண காசோலைகள்
பெற்றுக்கொள்ளலாம்.

★ நைஜீரியன் விசா

நைஜீரிய டிக்கட் எம்மிடம் பெறுவோருக்கு
மேலும் குறைந்த கட்டணத்தில் விசா பெற்றுத்தரப்படும்.

தொடர்பு கொள்க:

**மக்கினென்ஸ் ட்றவல் சேவிஸ் (சிலோன்) லிமிட்.,**

8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

த. பெ. எண்: 92 தொலைபேசி: 8154


## அனுராதபுரத்துக்கும் விஜயம் செய்வார்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டு மண்டபத்தில் நடைபெறும் பட்டமளிப்புவிழாவில் கலந்து கொள்வதற்குச் செல்வார்.

கொழும்பில் புதிதாக நிறுவப்பட்டுள்ள பிரித்தானிய உயர் ஸ்தானிகராலயத்தை மகாராணியார் திறந்து வைப்பார்.

22ம் திகதி காலை பிரிட்டிஷ் உதவி ஸ்தானிகரின் இல்லத்தில் பத்திரிகையாளர் மகாநாடு ஒன்றை மகாராணியார் நடத்துவார்.

4 மணிக்கு கொழும்பு மாநகர சபை மண்டபத்தில் மகாராணியாருக்கு பகிரங்க வரவேற்பளிக்கப்படும். இவ்வைபவத்திலும் அவர் உரையாற்றுவார்.

இதேஇரவு 10-50 க்குவிசேட ரயில் மூலம் ஜனாதிபதி, பிரதமர் சகிதம் அவர் அனுராதபுரம் செல்வார்.

23-ம் திகதி காலை அனுராதபுரத்தை அடையும் மகாராணியார் அங்கு சரித்திரப் புகழ் வாய்ந்த இடங்களைப் பார்வையிடுவார்.

அங்கிருந்து தம்புத்தேகம சென்று மகாவலித் திட்டத்தின் ஒரு பகுதியைப் பார்வையிடுவார்

5-10 மணிக்கு கட்டுகாஸ் தோட்டை பாலத்தில் அவருக்கு பகிரங்க வரவேற்பளிக்கப்படும்.

கண்டி ஜனாதிபதி மாளிகையில் இரவு விருந்துக்குப் பின்னர் கண்டியில் இரவு 9-15 முதல் 10-45 வரை நடைபெறும் விசேட பெரஹராவை மகாராணியார் பார்வையிடுவார்

24-ம் திகதி காலை 9-15 க்கு விக்ரோறியா அணைக்கட்டைப் பார்வையிடும் மகாராணியார் பின்னர் பேராதனை பூங்காவுக்கும் விஜயம் செய்துவிட்டு பகல் 12-20 க்கு ரயில் மூலம் கொழும்பு திரும்புகிறார்.

25-ம் திகதி நண்பகல் மகாராணியார் நாடு திரும்புவார். (ம-இ)

## இன்று.,.

3-ம் பக்கத் தொடர்ச்சி

டும் களிமண்ணாக மாறிவிட்டோமோ?'' என்று ஐயுறவு தெரிவிக்கிறார்.

"ஒரே ஒரு உண்மைக் கிறிஸ்தவர் தான் இருந்தார், அவரும் சிலுவையில் இறந்துவிட்டார்'' என்று ஒருவாகிடம் காந்தியடிகளின் மறைவுக்குப் பின் இருவர் என்று கொள்ளுமளவிற்கு ஒரு புனித உயிர்த்துறவி (Martyr) யாக வரலாறு விளக்குகின்றது.

## தேவியைத்...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

ஆன்மாவின் மலத்தை நீக்கிச் சிவத்துடன் சேர்ப்பிப்பவள், ஆன்மாக்களின் பாவங்களை அகற்றுபவள் சூரியனிடம் பதிந்து நிற்பவள், சந்திரனிடம் அமுததுளிகளைச் சொரிபவள், வானில் எல்லாவற்றையும் தன்னிடம் கலக்க நிற்பவள், காற்றில் பிராணவாயு என நிற்பவள், நெருப்பிற்கு வெப்பம் அளிப்பவள், நீரிற் குளிர்ச்சியாயுள்ளவள், மண்ணில் ஐம்பூதங்களின் இயல்பாயுள்ளவள் எனத் தேவியை நவந்தருபேதமாகக் கொள்வர்.

தேவி தூலம், சூக்குமம், காரணம் என்னும் மூவகை உடம்பிலும் நிறைந்தவள். இடை, பிங்கலை, சுழுமுனை என்னும் மூவகை நாடிகளையும் இயக்குபவள். மும்மூர்த்திகளுக்கும் மூத்தவள். மூவுலகங்களுக்கும் முதல்வி. சூரியனுக்கு ஒளிபோல எனக்குச் சீதை என்று இராமர் கூறியதாக "அநந்நாஹி மயா சீதா. பாஸ்கரேணப்பாபாயதா'' என்னும் சூத்திரம் கூறுகிறது.

—க. சி. குலரத்தினம்

## மின்விநியோக ...

3-ம் பக்கத் தொடர்ச்சி

றவற்றைப் பாவிக்கவோ முடியாது. இதன் விளைவாக இப்பகுதியில் எல்லா வீடுகளிலும் மண்எண்ணெய் குப்பி விளக்குகளையும், எரிபொருள் அடுப்புகளையுமே உபயோகிக்கின்றனர்

இது விஷயமாக சம்பந்தப்பட்ட மேலதிகாரிகளிடம் முறைப்பாடுகள் செய்தும் பயன் அளிக்கவில்லை,

இது இவ்வாறிருக்க; பல வீடுகளுக்கு மின் இணைப்புகளைச் செய்தும் கொக்குவில் கிராம சபைமின்பகுதியினர் மின்சாரம் வழங்கப்படாது அங்கலாய்க்கிறார்கள். இதுபற்றி கிராமசபை மின் விநியோகப்பகுதி உத்தியோகத்தரிடம் கேட்டால் மாவட்ட அபிவிருத்திச்சபை வந்தபின்னர் எவருக்கும் புதிதாக மின்சாரம் வழங்கப்படவில்லை என்று கூறுகின்றார்கள்.

இக்குறைபாட்டை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நிறைவேற்றிவைப்பார்களா?

செயலாளர்

மஞ்சேண்டிணி ச. ச. நிலையமும்
இளைஞர் சங்கமும்,
கொக்குவில்.

## சட்டத்தரணியாக சத்தியபிரமாணம்

(கொழும்பு)

திரு விசுவநாதன் உருத்திரகுமாரன், சட்டத்தரணியாக இன்று பிரதம நீதியரசர் திரு. நெவில் சமரக்கோன் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொள்வார்.

திரு. உருத்திரகுமாரன், யாழ். மேயர் திரு இராஜா விசுவநாதன் தம்பதிகளின் புதல்வராவார்.

## அ. தி. மு. க---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

எந்தக் கட்சியிலும் தாம் சேர்ந்து கொள்ளப்போவதில்லை என்றும் சுயேச்சையாகவே இயங்கப்போவதாகவும் திரு. வெங்கடேசன் அறிவித்துள்ளார்.

## தணிக்கை

பொதுசன பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அரசாங்கத்தினால் கொண்டுவரப்பட்ட பத்திரிகைத் தணிக்கை இப்பொழுது அமுலில் உள்ளது.

## கருணாநிதி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டாவது மாகாண மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகையும் தாக்கல் செய்யப்பட்டது.

மாஜிஸ்திரேட் இன்று வழக்கு விசாரணையை 21-ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

## ஆயிரத்துக்கும்——

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வளித்துள்ளார்.

தமிழகத்துக்கு அண்மையில் விஜயம் செய்த விருக்கும் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கத்திடம் நூல் நிலையத்துக்கான நூல்கள் கையளிக்கப்படுமெனவும் அவர் தெரிவித்துள்ளார். (மா)


## வெளிநாடுகளில் தொழில்கள்

பெறுவதற்கு ஏற்ற தொழில் நுட்பப் பயிற்சிகள்-வெல்டிங் (Arc & Gas), வயறிங் (I. E. E. முறைப்படி), RADIO OFFICERS (P. M. G) முதலியன.

NATIONAL INSTITUTE OF ENGINEERING TECHNOLOGY

57, 59 பாங்சோல் வீதி, யாழ்ப்பாணம்.



## பணம்? பணம்?? பணம்???

நீங்கள் இறக்குமதி செய்துள்ள பொருட்கள்
தேங்கி நிற்கின்றனவா?
உங்களுக்கு வியாபாரத்திற்கு பணம் தேவையா?
உங்கள் குறைகளை தீர்க்க நாங்களிருக்கின்றோம்
வந்து சந்திக்கவும்

விற்பனை முகாமையாளர்,

TFC

**த பினன்ஸ் கம்பனி லிமிட்டெட்,**

249 சி, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி; 7680


இப்பத்திரிகையாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்குவீதி, 68-ம் இலக்கத்திலுள்ள "ஈழநாடு" லிமிட்டெட்டுக்காக காங்கேசன்துறை வீதி 606ம் இலக்கத்திலுள்ள லோகிலை அச்சகத்தில் 1981 ஆம் ஆண்டு அக்டோபர் 2-ம் திகதி அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper The General Post office: Sri Lanka Regd. Q. B. 100236/81. P. O. Box 49. Jaffna. தொலைபேசி: 7707, 889, 8186.